# இஸ்லாம் சுவன சுகபோக வாழ்கைக்கான வழி காட்டி.

ஒருவர் மற்றவருக்கு உதவி ஒத்தாசையாக இருக்கும் விதத்திலேயே இந்த உலகம் படைக்கப்பட்டிருக்கிறது. அதனால் தேடிச் சென்று பிறருக்கு உதவுமாறு மதங்களெல்லாம் அதற்கு உட்சாகமூட்டுகின்றது. அதனடிப்படையில் ஒவ்வொருவரும் பிறருக்க தம்மால் இயன்ற உதவிகளைச் செய்யவே செய்கின்றார்கள். இதில் சிலர் சிறுசிறு பிரச்சினைகளுக்கு உதவுபவர்களாகவும் மற்றும் சிலர் பாரிய பிரச்சினைகளுக்கும் வேறு சிலர் நிகழவிருக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆய்வு செய்து அதற்கான முன் ஏற்பாட்டையும் செய்து கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு பிறரின் நலனுக்காக உழைப்பவர்களில் எவரும் சிரமங்கள் சோதனைகள் வேதனைகள் தடைகள் என்பன தாண்டாது வெற்றி பெற்றதற்கான வரலாறு மனிதனுக்கு இல்லை என்பதனையும் மனிதன் நன்கறிவான்.

இன்று மனிதன் வாழ்ந்துகொண்டிருக்கின்ற இந்த பூமி எதிர்வரும் காலத்தில் இதில் மனிதனால் வாழ முடியாதுபோகும் நிலை ஏற்படப்போகின்றது. அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் அதற்கு மாற்று வழியென்ன என்பதற்கான தேடலில் மனிதன் இப்பொழுதே ஈடுபடத் தொடங்கிவிட்டான். அவ்வாறு இந்த பூமி மனித வாழ்க்கைக்கு உதவாமல் போகப்போகின்றதென்ற கருத்து இந்த பூமி அழிந்துவிடும் என்பதைக் காட்டுகிறது. அதனையடுத்து மற்றுமொரு கிரகத்தில் மனிதன் வாழப்போகின்றான் என்றால் அந்தக் கிரகம் இன்றுள்ள சூரியக் குடும்பமாக இருக்கப்கோவதில்லை. இந்த பூமியில் இன்று மனிதன் வாழ்வதுபோல் வேறு எந்தக் கிரகத்திலும் இந்த பூமி அழியாதவரை மனிதனால் வாழவே முடியாதென்பதே யதார்த்தமாக இருக்கிறது. எனவே மாற்றுக் கிர(உல)கத்தில் மனிதன் சுகமாக வாழவேண்டும் என்றால் அவன் செய்யவேண்டியது என்ன?

இந்த பூமி அழிந்த பின்னர் வேறொரு கிரகத்தில் மனிதனால் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கிறதா? என்பதைக் கண்டு பிடிப்பதற்காகவே செவ்வாய்க் கிரகத்தினை தீவிரமாக ஆய்வாளர்கள் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். உண்மையில் இந்த சூரிய குடும்பங்களெல்லாம் முற்று முழுதாக அழிந்த பின்னர் மனிதன் வாழப்போவது சுவனம் அல்லது நரகமே தவிர செவ்வாயோ அல்லது புதனோ அல்ல. சுவர்க்கம் நரகம் நிரந்தரமானது. அது அழிவற்றதொரு வாழ்வாகவும் இருக்கப்போகிறது.

இந்நிரந்தர வாழ்க்கையில் வெற்றிபெற்று சுகபோகமாக வாழவேண்டுமானால் லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என மனதினால் உறுதி கொண்டு நாவினால் அதனை மொழிந்துவிடுவதைத் தவிர வேறு எதனையும் அகிலங்கள் அனைத்தையும்

படைத்தவன் மனிதனிடம் கோரவில்லை. இன்னும் அவனேதான் தன்னை எவரும் இவ்வுலகில் தலைக் கண்ணால் காண முடியாதென்றும் சொன்னான். அதற்காக காணாத ஒன்றை எவ்வாறு நம்புவதென்று நீங்கள் கேட்கலாம்?.

இருக்கின்றதென்று வாதிக்கப்படுமொன்று நம் கண் பார்வைக்குத் தெண்படவேண்டும். இன்னும் அதற்கு உருவமும் இருக்கவேண்டும் என்ற வாதம் மனித சிந்தனையில் உருவான பிழையானதொரு கற்பனையே தவிர அதில் எவ்வித உண்மையுமில்லை. அத்துடன் உலகிலுள்ள எந்தவொரு பொருளும் தன்னை வணங்குமாறு சொன்னதில்லை. இன்னும் படைப்புக்களில் எவரும் தன்னைக் கடவுள் என்று வாதிட்டுவிடக்கூடாதென்பதற்காகவே நான் கடவுள் என்று வாதிட்ட ஒரு பேரரசனின் பூதவுடல் படிப்பினைக்காக இன்றும் மாசுபடாது பாதுகாக்கப்பட்டிருப்பதை மனிதன் சிந்தித்துப் பார்க்க கடமைப்பட்டிருக்கின்றான். இவன் சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்னர் செத்துப்போன ஒரு மனிதனாகும்.

நுண்ணுயிர்கள் பற்றி நீங்கள் படித்திருப்பீர்கள். அல்லது கேள்விப்பட்டிருப்பீர்கள். ஒவ்வொரு மனிதனிலும் கோடிக்கணக்கான நுண்ணுயிர்கள் வாழ்வதாகச் சொன்னால் ஏற்றுக்கொள்வீர்களா? அல்லது மறுக்கப்போகின்றீர்களா? ஒவ்வொருவரின் வாயில் மட்டும் பத்துக் கோடிக்கும் அதிகமான நுண்ணுயிர்கள் வாழ்வதாக அண்மையில் ஆய்வறிக்கையொன்று வெளியாகியிருக்கிறது. இதில் விநோதம் என்னவென்றால் ஒவ்வொரு மனிதனிலும் 99.9 சதவீதமான இடங்களில் நுண்ணுயிர்கள் வாழ்வதனை ஆய்வாளர்கள் இப்பொழுதுதான் கண்டுபிடித்து உலகில் வாழும் ஒவ்வொரு தனி மனிதனும் தனித்தனி உலகம் என்று அறிக்கையினை வெளியிட்டிருக்கிறார்கள். நமது உடலின் 99.9 சதவீதமான இடங்களில் பல கோடி நுண்ணுயிர்கள் வாழ்வதையே நமது தலைக் கண்ணுக்குத் தெரியாது இருக்கும்பொழுது இவ்வகிலங்களின் ரட்சகனை மட்டும் காணவில்லை என்பதற்காக கற்பனைக் கடவுள் என்று எவ்வாறு வாதிட முடியும்? அல்லது அவ்வாறான ஒருவனுக்கு எவ்வாறு உருவம் கற்பிக்க முடியும்? என்பதை மனிதன் சிந்திக்க கடமைப்பட்டிருக்கின்றான்.

கடவுள் ஒருவன் அன்றி பலதல்ல. அவன் உருவம் அற்றவன். அவனை மட்டுமே வணங்கவேண்டும் என்ற யதார்த்தமான கருத்தினைப் போதிக்க வந்தவர்களில் இப்ராஹீம் என்பவர் மிக முக்கிய கதாபாத்திரமுள்ளவர். தீர்க்கதிரிசியான இவர் கி.மு. 2200 ஆண்டளவில் இராக்கில் பிறந்து கி.மு. 2000ம் ஆண்டளவில் ஜெரூஸலத்தில் சமாதிகொண்டவராகும். உருவ வழிபாட்டில் மூழ்கிப்போயிருந்ததொரு ஊரில் இவர் பிறந்தார். இவரது குடும்ப உறவினர்கள் உருவ வழிபாட்டுத் தளங்களின் தலைமை குருக்களாக கடமையாற்றிக்கொண்டிருந்தனர். ஓரிறைக் கொள்கையினை அவர் தனது குடும்பத்தினருக்கும் ஊர் மக்களுக்கும் எடுத்துச்

சொன்னார். அதனால் அவரது சொந்தக் குடும்ப உறவினார்களே பிறந்த ஊரை விட்டும் அவரைத் துரத்திவிட்டார். அதற்காக அவர் நெருப்பக் கிடங்கிலும் வீசப்பட்டார். அதற்காக உருவ வழிபாடுதான் பண்டைய மார்க்கம் என்ற வாதத்தினை மனிதன் முன்வைப்பதாக இருந்தால் அதனை ஆதார பூர்வமாக நிரூபித்துக் காண்பிக்கவேண்டும். அதுவொரு மனிதன் எழுதிய கற்பனைக் கதையாக இருந்துவிடக்கூடாது.

இறைத்தூதுவர் தீக்கதிரிசி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் போதித்த ஓறிறைக் கொள்கை கோட்பாட்டின் கருத்தையே யூதர்களுக்கு இறைத்தூதுவராக அனுப்பி வைக்கப்பட்ட மோஸஸ் எனப்படும் மூசாவும் கிறிஸ்துவர்களால் ஜீஸஸ் என்றழைக்கப்படும் இறைத்தூதுவர் ஈசாவும் போதனை செய்தார்கள். இவ்விரு தீர்க்கதரிசிகளும் இப்ராஹீமுடைய வழித்தோண்றல்களாக இருக்கிறார்கள்.

இவ்விரு வேதக்காரர்களும் இப்ராஹீம் என்ற சொல்லினை அப்ரஹாம் என்று சிறு மாற்றத்துடன் உபயோகம் செய்து இன்றும் சொந்தம் கொண்டாடி வருகின்றார்கள். ஒரு சில மாதங்களுக்கு முன்னர் இஸ்ரேலுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த பரிசுத்த பாப்பரசர் ஃபிரான்ஸிஸ் அவர்கள் யூதர்கள், கிறிஸ்துவர்கள், இஸ்லாமியர்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தியதுடன் இம்மூவின சமூகத்தின் வேத நூற்களில் இப்ராஹீம் தொடர்பான கருத்துக்கள் பதிவாகியிருக்கிறது. இப்ராஹீம் நம்மனைவருக்கும் ஈமானின் தந்தையாக இருக்கிறார் என்று கூறிச் சென்ற செய்தியை ஊடகங்களில் வாசிக்க முடிந்தது. இஸ்ரேல் என்பது நபியுல்லாஹ் இப்ராஹீமின் பேரரான யஃகூப் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சிறப்புப் பெயராகும். இப்ராஹீம், இஸ்மாயீல், யஃகூப்போன்ற சொற்கள் ஹிப்ர் மொழிச் சொற்கலாகும். இதன் உச்சரிப்புக்கள் பின்வருமாறு உபயோகத்தில் காணப்படுகிறது.

யஃகூப் - துயஉழடி, யூசுப் - துழளநிா, தாவூத் - னுயஎனைஇ ஈசா – நுயளரஇ மூசா – ஆழளநளஇ சுலைமான் - ளுழடழஅழவெ, இஸ்மாயீல் - ஐளாஅயநடஇ இஸ்ஹாக் - ஐளயயஉ, ஹாரூன் - யுயசழவெ, தானியால் - னுயநைட என்று இப்பெயர்களின் உச்சரிப்பில் மாற்றங்கள் இடம்பெற்றதுபோன்று இப்ராஹீம் ஐடிசயாமைஅ என்பது யுடிசயாயஅ அப்ரஹாம் என்றும் டீயசயாஅய பிராஹ்மா என்றும் மாற்றமடைந்து உபயோகத்திலிருப்பதை நாம் நன்கறிவோம். இதில் பிராஹ்மா என்ற நாமம் இந்து மத சகோதரர்களிடத்தில் அதிகம் உச்சரிக்கப்படும் ஒரு நாமமாக இருப்பதை மறுப்பதற்கில்லை. இது அவர்களின் கடவுள்களின் ஒரு கடவுளின் பெயராகும். அவர்களிடமுள்ள வேத நூல் பிராஹ்மா முக்கிய கடவுள் என்று கூறுகிறது. பிராஹ்மாவை வணங்குபவர்கள் பிராஹ்மனர்கள் என அழைக்கப்படுகிறார்கள்.

இப்ராஹீம் (அப்ரஹாம்) யூதர் என யஹுதிகளும் அவரொரு கிறிஸ்துவர் என்று நஸாராக்களும் கூறிவருவதனை அல்குர்ஆன் பிழையென்று வாதிடுவதுபோன்று பிராஹ்மா என்ற சொல் இப்ராஹீமைத்தான் குறிக்கின்றதென்றால் அவரைக் கடவுளாக ஏற்றுக்கொண்டிருந்தவர்கள் தொடர்பில் அல்குர்ஆனின் நிலைப்பாடு என்னவென்று கேட்போமானால்,

நமது நாயகம் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி வசல்லம் அவர்கள் கி.பி 570ல் புனித மக்கத்து மண்ணில் பிறந்தபொழுது அப்பிரதேசவாசிகளும் நபியவர்களின் குடும்ப அங்கத்துவர்களில் பலர் உட்பட க.்.பதுல்லாஹ்வில் வைகப்பட்டிருந்த 300க்கும் மேற்பட்ட உருவச் சிலைகளை கடவுள்களின் அவதாரங்கள் எனக் கருதி வணக்கம் புரிபவர்களாகவே காணப்பட்டார்கள். பின்னர் தனது நாட்பதாவது வயதில் அல்லாஹ் அல்லாத வேறு எந்தப் பொருளையும் வணங்குவது கூடாது. மாறாக இப்ராஹீமுடைய மார்க்கத்தினைப் பின்பற்றவேண்டும் என்று நாயகம் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி வசல்லம் அவர்கள் தனதூர் மக்களிடம் சொன்னதற்கு, நாங்களும் இப்ராஹீமுடைய மார்க்கத்தில்தான் இருக்கின்றோம் என்று அம்மக்கள் நபியவர்களிடம் கூறிவந்திருக்கிறார்கள். இது பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு விபரிக்கின்றது.

இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஒரு சமுதாயமாகவும், அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டவராகவும் உண்மை வழியில் நின்றவராகவும் இருந்தார். இணை வைப்பராக அவர் இருந்ததில்லை (16:120) என்று கூறி தாங்கள் இப்ராஹீமுடைய மார்க்கத்தில் இருப்பதாக குறைஷிக் காபிர்கள் கூறி வந்ததை மறுத்து உருவ வழிபாடுள்ள மக்கத்து குறைஷிக் காபிர்கள் இப்ராஹீம் பற்றி அறிந்து வைத்திருந்த தகவல் பிழையென்பதை தெளிவுபடுத்தியது.

இன்னும் தீர்க்கதரிசியான இப்ராஹீம் அவர்கள் யூதராகவோ, கிறுஸ்துவராகவோ இருக்கவில்லை. ஆனால் அவர் முஸ்லிமாக இருந்தார். மேலும் அவர் இணை வைப்பவர்களில் உள்ளவராகவும் இருக்கவில்லை (03:66) என ஹழ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் எந்த மார்க்கத்தில் இருந்தார் என்ற விபரம் இந்த ஆயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இந்து மத நூலான எநனய ்.பீதா, நபியுல்லாஹ் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அல்லாஹ்வால் வழங்கப்பட்ட சுஹுபுகளின் அடிப்படையில் இருப்பதாக னுச ்.பாலிஹ் சுஜப் என்பவர் கூறுகிறார். மேலும் இந்து மத நூற்களில் சுமதி, விஷ்னுயாஷ் என்ற இரு பெயர்கள் குறிப்பிடப்படுகிறது. சுமதி என்றால் சாந்தி என்று பொருள். அவ்வாறே விஷ்னுயாஷ் என்றால் கடவுளின் அடிமை என்பது பொருளாகும். இவ்விரு பதங்களும் நமது நாயகம் முஸ்தபா

ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி வசல்லம் அவர்களின் தயார் ஆமினா (சாந்தி) வையும் அப்துல்லாஹ் (இறைவனின் அடிமை) வையும் குறித்துப் பேசுகின்றதென்று னுச ஸாகிர் நாயக் அவர்கள் கூற்றினையும் அவதானிக்கின்றபொழுது பிராஹ்மனர்கள் என்றால் இப்ராஹீமுடைய மார்க்கத்தினைப் பின்பற்றுபவர்கள் என்ற யதார்த்தம் தெளிவாகப் புரிகின்றது.

யூதர்கள், கிறிஸ்துவர்கள், உருவ வழிபாட்டுக்காரர்கள் என சகலரும் தங்களைத் தாங்கள் இப்ராஹீமுடைய மார்க்கத்தில் இருப்பதாக கூறிக்கொண்டாலும் நபிமார்களான இப்ராஹீம், மூசா, ஈசா ஆகிய நபிமார்களினால்கூட ஏற்கனவே சுபச்செய்தி சொல்லப்பட்டு யூத, நஸாராக்களெல்லாம் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்த இறுதி நபி நமது நாயகம் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி வசல்லம் அவர்களை நபியாக ஏற்றுக்கொண்டு அல்லாஹ் ஒருவனை வணங்காத காரணத்தினால் இவர்களெல்லாம் இறை நிராகரிப்பாளர்களாக மாறிவிட்டார்கள் என்று அல்குர்ஆன் எச்சரித்துக்கொண்டிருக்கிறது. எனவே இப்ராஹீம் அவர்கள் இணை வைப்பாளாராக இருக்கவில்லையென்ற இறை வசனம் மக்கத்துக் குறைஷிக் காபிர்களுக்கு மட்டும் சொந்தமானது அல்ல. உலகில் எந்தக்கோணத்தில் யார் உருவ வழிபாட்டில் ஈடுபடுகின்றார்களோ அவர்கள் எல்லோரையும் இவ்விறை வாக்கியம் உள்ளடக்கிவிட்டதென்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். இவ்வாறு யார் இவ்வுலகில் வாழ்ந்து மரணமடைகின்றாரோ அவர் நிச்சயமாக மனிதன் தேடிக்கொண்டிருக்கின்ற மாற்றுக் கிரகமான சுவன வாழ்க்கையில் பேரின்ப சுகபோகங்களுடன் வாழ்வான் என அல்குர்ஆனும் அல்ஹதீதும் அறிவுறுத்திக்கொண்டிருக்கின்றன. இதுதான் நமது சகோதரங்களுக்கு நாம் செய்யும் பேருபகாரமாக இருக்கிறதென்பதை என்றாவது ஒரு நாள் இவ்வுண்மையை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்களும் அவ்வாறு ஏற்றுக்கொண்டவர்களுக்கு இடராக இருப்பவர்களும் நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள். அது அந்நாளில் அவர்களுக்கு எவ்விதத்திலும் உதவப்போவதில்லையென்றும் அல்குர்ஆன் அச்சுறுத்திக்கொண்டிருக்கிறது.
அனைவருக்கும் இனிய பெருநாள் நல்வாழ்த்துக்கள்.


அபுத்தூபா ஏறாவூர்
அல்ஜாமிஅத்துல் அஸீஸிய்யா அரபிக் கல்லூரி விருதோடை

www.kalmunaijamia.blogspot.com
swjf786@gmail.com